**தமிழச்சி தங்கபாண்டியன்**

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

**நாள் : 14.03.2023**

## தொலைத்தொடர்பு சட்ட வரம்பிற்குள் ஓடிடி தகவல் தொடர்பு சேவைகள் கொண்டுவரப்பட்டதால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து அரசு ஆய்வு செய்ததா?

## திமுக எம்பி தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி

தொலைத்தொடர்பு சட்ட வரம்பிற்குள் ஓடிடி தகவல் தொடர்பு சேவைகள் கொண்டுவரப்பட்டதால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து அரசு ஆய்வு செய்ததா? ஆய்வு செய்து இருந்தால் அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

**இதுகுறித்து மக்களவையில் செவ்வாய்க்கிழமை அவர் எழுப்பிய கேள்வி விவரம்:**

ஓடிடி தகவல் தொடர்பு சேவை நிறுவனங்களுக்கும் இதர ஓடிடி தளங்கள் மற்றும் தகவல் தொடர்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் இடையே வேறுபாடுகளை ஏற்படுத்த ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அவ்வாறு உத்தேசித்திருந்தால் அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

தொலைத் தொடர்பு மசோதாவில் உள்ள விளைவுகளைக் குறைக்கும் வகையில் ஒன்றிய அரசு மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைகளால் நமது நாட்டில் செயல்படும் ஓ டி தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படும். அதே சமயம் வெளிநாட்டில் இருந்து செயல்படும் நிறுவனங்கள் பாதிக்கப்படாது.

இதன் காரணமாக வெளிநாட்டு நிறுவனங்களுடன் போட்டியிட இயலாமல் இந்தியாவில் செயல்படும் ஓடிடி நிறுவனங்களுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படும் என்று தமிழச்சி தங்க பாண்டியன் சுட்டிக் காட்டினார்.

**திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் செய்தி, தகவல் தொடர்பு, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாகுர் அளித்த பதில் விவரம்:**

இந்திய தகவல் தொடர்பு 2021 வரைவு மசோதா பொதுமக்களின் கருத்தறிவதற்காக 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசின் தகவல் தொடர்புத்துறை அமைச்சகத்துக்கு தகவல் தொடர்புத்துறை தகவல் தெரிவித்துள்ளது. ஓடிடி தகவல் தொடர்பு சேவையும் ஒருவகையான தகவல் தொடர்பு சேவைதான் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

******